தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ச. கார்த்திகேயன் Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-5-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மே மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு

பொதுவாக விவசாய பயிர்களில் பூச்சி மற்றும் நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே காணப்படுகின்றன. ஆதலால், விவசாயிகள் தங்கள் பயிர்களில் விளக்குப் பொறி அமைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், சொர்ணவாரி மற்றும் கார் முன்பருவ நெல் பயிரிடும் விவசாயிகள் கவனத்திற்கு:

**நாற்றாங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள்.**

இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, நெல் கூட்டுப்புழு மற்றும் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நோயினைப் பொறுத்தவரை இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றினைக் கட்டுப்படுத்த

அ) ஈர விதை நேர்த்தி:

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும்.

**2. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்**

நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும். இந்தத் தேங்கிய நீரில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

**நெற்பயிரில் பூச்சி மேலாண்மை**

1. நாற்றங்காலில் அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு 12.5 கிலோ 20 சென்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5% தயாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி உடன்) பயிர்களில் தெளிக்கவும்.
4. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் குளோர்பைரிஃபாஸ் 20 EC – 80 மிலி / 20 சென்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**கடலையில் சிகப்பு கம்பளி புழு தாக்குதல் மேலாண்மை**

கோடையில் கடலை பயிரிடும் விவசாயிகள் குறிப்பாக சேலம், தேனி, மதுரை மற்றும் திண்டிவனம் பகுதியில் சிகப்பு கம்பளி பூச்சியின் தாக்குதல் கோடை மழைக்கு பின் தென்பட வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் தங்கள் வயல் வெளியில் விளக்குப்பொறிகளை அமைத்து (ஏக்கருக்கு ஒன்று) அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். இவற்றை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட முறைகளை பின்பற்றவும்.

- கூண்டு புழுக்களை வயல் வரப்புகளிலும் மற்றும் நிழல் பகுதிகளிலும் வயலில் கண்டறிந்து அழிக்கவும்.
- உடு பயிர்களான துவரை மற்றும் தட்டை பயிர்களில் காணப்படும் இளம் புழுக்களை கலைந்து எடுத்து அழிக்கவும்.
- கடலை பயிர்களில் தென்படும் முட்டை பருவத்தை கண்டறிந்து அழிக்கவும்.

தேவைப்படின் கீழ்க்கண்ட மருந்துகளில் ஏதாவது ஒன்றை தெளிக்கவும் (ஒரு ஏக்டருக்கு).

- பெனிட்ரோதயான் 50 EC 750 மில்லி
- ஈதியான் 50 EC 500 மில்லி
- பாசோலோன் 35 EC 750 மில்லி
- டைகுலோர்வாஸ் 76 EC 627 மில்லி

**தகவல்:**

பயிர் பாதுகாப்பு மையம்,
வேளாண் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611237

மக்கள் தொடர்பு அலுவலர்